**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**ஜூலை-2026 பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு**

**விடைத்தாட்களின் ஒளிநகலினை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளல்**

**மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூலை-2026 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி விடைத்தாள் ஒளிநகல் கோரி விண்ணப்பித்த தேர்வர்கள் 19.08.2026 (**புதன் கிழமை**) **பிற்பகல் முதல்** www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification-ஐ Click செய்து SSLC Examinations என்பதை Click செய்தவுடன் "SSLC JULY-2026 - Answer Script Scanned Copy Download" என்ற வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் ஒளிநகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விடைத்தாட்களின் ஒளிநகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்**, இதே இணையதள முகவரியில் "Application for Retotalling/Revaluation" என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை இரு நகல்கள் எடுத்து, பூர்த்தி செய்து, 20.08.2026 (**வியாழக்கிழமை**) **மற்றும்** 21.08.2026 (**வெள்ளிக்கிழமை**) ஆகிய நாட்களில் (**காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**) சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்திலும், விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையைப் பணமாக செலுத்த வேண்டும். அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலக முகவரியை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியில் Press Release என்பதை Click செய்து அறிந்து கொள்ளலாம்.

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

<u>மறுகூட்டல்</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

**தேர்வர்கள் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் நேர்வுகளில் மொத்த மதிப்பெண்களில் ஏதேனும் அதிகரித்தாலும் அல்லது குறைந்தாலும் அதுவே இறுதி மதிப்பெண்களாகும்.** எனவே, தேர்வர்கள் தங்களது விடைத்தாளினை சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்களிடம் வழங்கி அதனை ஒப்பிட்டபின், மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒளிநகல் பதிவிறக்கம் செய்தல் மற்றும் மறுகூட்டல்/மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல் தொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**ஒம்/-**

**இயக்குநர்**

**இடம் : சென்னை – 6**

**நாள் :** 18.08.2026

.